# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள். 06.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 442/D/2023**

திரு அ.செபாஸ்டின் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்பு செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்
வழங்கல் துறை,
இயக்குநரகம்,
சென்னை - 600 009. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 04.07.2022 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 26.09.2022 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 09.12.2022 |

******

**ஆணை**

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு அ.செபாஸ்டின் அவர்கள் ஆஜராகவில்லை. மனுதாரர் சார்பாக அவரது மனைவி திருமதி.ஜோஸ்பின்மேரி அவர்கள் இவ்வாணையத்திற்கு 30.06.2026 தேதியிட்டு அளித்த கடிதத்தில் தனது கணவர் திரு அ.செபாஸ்டின் அவர்கள் 14.07.2024 அன்று கர்த்தருக்குள் நற்கதியடைந்து விட்டார் என்று தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு கிருஷ்ணன் பிச்சை, அரசு சார்புச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் (பேரூ.1) துறை, தலைமைச் செயலகம், சென்னை - 09 அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 04.07.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், அரசு கோப்பு எண்.18468/பே.ரூ.1/2013 -ன் அலுவலகக் குறிப்பின் (Office Note) நகல் தொடர்பான தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், அரசு சார்புச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை, தலைமைச் செயலகம், சென்னை - 09 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 26.09.2022 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 09.12.2022 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்த மனுதாரர் திரு அ.செபாஸ்டின் அவர்களின் மனைவி திருமதி.ஜோஸ்பின்மேரி 14.07.2024 அன்று கர்த்தருக்குள் நற்கதியடைந்து விட்டார் என்று தெரிவித்துள்ளதைப் பதிவு செய்து, இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் திரு அ.செபாஸ்டின் அவர்கள் இறந்துவிட்டதாகத் தெரிவித்து இறப்பு சான்றிதழை சமர்ப்பித்தார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டின் மனுதாரர் திரு அ.செபாஸ்டின் இறந்துவிட்டாரென்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதே என்று ஆணையம் முடிவு செய்கிறது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டிய நிலை எழுந்துள்ளது. (It is settled principle of law that, personal action dies with the person concerned (actio personalis moritur cum persona). With the demise of the appellant who filed this second appeal, this appeal will also automatically get dismissed. Hence this second appeal is dismissed.)

5. எனவே, இம்மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 442/D/2023**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்பு செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்
வழங்கல் துறை,
இயக்குநரகம்,
சென்னை - 600 009.

**மனுதாரர்**
திரு அ.செபாஸ்டின்,
க.எண்.64ஏ, பழனியப்பா வீதி,
தவுட்டுப்பாளையம்,
அந்தியூர்,
ஈரோடு மாவட்டம் - 638 501.

***Copy to: File***
***VP / PA***